1974 சனவரி 23]

வடார்க்காடு மாவட்டத்தில் புதிய அணைக்கட்டுகள்

***102** **விளு—திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆண்டியப்பனூர் அருகே பாம்பாற்றின் குறுக்கே அணை ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீடு ரூபாய் நாற்பத்தைந்து லட்சங்கள். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில் ஜவ்வாது மலை அருகே சண்பக அணை கட்ட எற்கனவே திட்டமிடப்பட்டிருக்கிறதா என அறியவிரும்புகிறேன். ஆமென்ருல், அதை அரசு எற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

***103** **விளு—திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், புல்லூர் அருகே பாலாற்றில் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) பாலாற்றின் குறுக்கே புல்லூர் கிராமத்தினருகே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத்திற்கு மதிப்பீடும், வரைபடங்களும், பாசனத் தலைமைப் பொறியாளர் அவர்களின் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளன.